# பொதுக்காலம் 5 ஆம் வாரம்

திருவழிபாடு ஆண்டு - B

2021-02-07

*இன்றைய வாசகங்கள்:*

*யோபு நூலிலிருந்து வாசகம்* 7: 1-4,6-7,

*திபா* 147: 1-2. 3-4. 5-6,

*திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்* 9: 16-19, 22-23,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 1: 29-39

## திருப்பலி முன்னுரை

*அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவே என் ஆண்டவர் என்று அறிக்கையிட்டு அவரை வழிபட இவ்வாலயம் வந்துள்ள உங்கள் அனைவரையும் வாழ்த்தி அன்புடன் வரவேற்கின்றோம். இன்று பொதுக்காலம் ஐந்தாம் ஞாயிறு. உதவி கேட்டு வருபவர்கள்தாம் உலகில் அதிகம். உதவிக்கு வருபவர்கள் மிகச் சிலர்தான். ஆனால் எல்லாரையும் எல்லா வகையிலும் விடுவிப்பவராக இருக்கிறார் இயேசு என்பதை சிந்திக்க அழைக்கிறது நற்செய்தி. குணமளித்த இயேசுவைப்பற்றி நற்செய்தியில் கேட்டு வந்த நாம் இன்றும் அவரை குணமளிக்கும் வல்லவராகக் காண்கிறோம். ஆம் இயேசு வெறும் வார்த்தைகளால் மட்டும் நற்செய்தியைப் பறைச்சாற்றவில்லை. மாறாகத் தம் செயல்களால், வாழ்வால் அதை அறிவித்தார். அவரின் குணமளிக்கும் வல்லமையால் உடல் நோயிலிருந்து விடுதலையும் தந்தார். இவ்வாறு தனது இறையரசுப் பணியில் இம்மை வாழ்வையும், மறுமை வாழ்வையும் ஒன்றிணைத்து வாழ்வாலும், வார்த்தையாலும் போதித்துத் தானே நடமாடும் நற்செய்தியானார். நாமும் இயேசுவைப் பின்பற்றி நடமாடும் நற்செய்திகளாக மாற இன்றைய திருப்பலியில் மனதார வேண்டிடுவோம்.*

## *விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

***நலன்களுக்கெல்லாம் தொடக்கமும் நிறைவுமாகிய இறைவா!***

*எம் திருஅவையில் உள்ள அனைவரும் எத்தகைய துன்பங்கள் சோதனைகள் வந்தாலும் இறை நம்பிக்கைக் குறையாமல் உமது அன்பின் சாட்சிகளாக நற்செய்திகளின் விழுமியங்களைத் தங்கள் வாழ்வாக மாற்றிக் கிறிஸ்துவின் நற்செய்தியாக வாழ்ந்திடத் தேவையான வரங்களை அருள் மாறிப்பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***செப வீரரான இயேசு ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறோம்.***

*உமது அத்தனை பணிகளுக்கு மத்தியிலும் செபிக்க நீர் நேரம் ஒதுக்கினீர். செபிப்பதற்கு வாய்ப்புகளை உருவாக்கினீர். உம்மைப் போல நாங்களும் செப வீரர்களாக வாழ்ந்திடத் தேவையான வரங்களை அருள் மாறிப்பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***என்றென்றும் இரக்கமுள்ள இறைவா!***

*உமது பிள்ளைகள் இளையோராகிய நாங்கள் எமது தேவைகளில் முதன்மையான தேவை நீரே என்று உணர்ந்து நாங்கள் முழுமையாக உம் கரம் பற்றிக் கொள்ளவும், நிலைவாழ்வுப் பெற்று உம்மை அடையவும், இறைநம்பிக்கையில் வளரவும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***எங்கள் தந்தையாகிய தந்தையே!***

*துன்பங்களாலும், துயரங்களாலும், வறுமையாலும் வாடிக்கொண்டிருக்கும் அனைவர் மீதும் இரங்கி, ஆசி வழங்கி, உம் திருமுக ஒளியை அவர்கள்மீது வீசி அமைதியையும், மகிழ்ச்சியையும் அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***ஒளியும் மீட்புமான தந்தையே இறைவா!***

*எமது இளைஞர்களுக்கு நீர் ஒளியாகவும், வழியாகவும் இருந்து வழிகாட்டி, உமது சாட்சிகளாய் வாழ அவர்களுக்கு அருள் தந்து ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***மருத்துவராய் நலம் அளிக்கும் தந்தையே, எம் இறைவா!***

*நோய்களின் உருமாற்றத்தால் செய்வதறியாமல் தவிக்கும் எங்களைக் கண்ணோக்கும். சிறந்த மாற்றுமருந்துகளைக் கண்டுபிடிக்கத் தேவையான ஞானத்தையும், அறிவாற்றலையும் எம் மருத்துவர்களுக்குத் தந்து எம் நலம் காக்க அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

www.tamilcatholicnews.com